சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 04.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **42/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-7 |
| சாட்சியின் பெயர் | : | மாரிமுத்து |
| தந்தை பெயர் | : | தங்கையன் |
| கிராமம் | : | மூவாநல்லூர் |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 54 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 9, 12 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் லோடு மேனாக பணிபுரிந்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவர் ஆவேன். அ.சா.1 ராதிகாவை தெரியும். ஆஜர் எதிரிகளை

தெரியும். எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** அக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி**

அ.சா.1 கொடுத்த புகாரின் பேரில், காவல் துணை கண்காணிப்பாளர் 12.10.2021ம்தேதி இரவு 08.00 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் தானும், சக்திவேல் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பமிட்டதாகவும், மேலும் சம்பவ இடத்திலிருந்து உடைந்த பிளாஸ்டிக் நாற்காலிகள் 5ம், பிரவுன் கலர் நாற்காலிகள் 3ம், மரக்கலர் நாற்காலி 1ம், ஆரஞ்சு கலர் நாற்காலி 1ம், 10 x8 cm நீளம்கொண்ட கிழிந்த நிலையில் உள்ள பிளக்ஸ் 1ம் போலீசார் கைப்பற்றியதாகவும், அந்த கைப்பற்தல் மகஜரில் தானும், சக்திவேல் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பமிட்டதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் தனது ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.04 16:38:07 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.